கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

**ED 2122 கல்வித்திட்டமிடலும் அபிவிருத்தியும்**
**Educational Planning and Development**

EASTERN UNIVERSITY, SRI LANKA
01 JUN 2015

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01.(அ) திட்டமிடல் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்கி திட்டமிடலின் அவசியத்தைப்பற்றிய உமது நிலைப்பாட்டை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) "முகாமைத்துவ செயற்பாடுகளில் திட்டமிடலானது ஒரு கூறாகவே செயற்படுகின்றது." இந்த வகையில் திட்டமிடலுக்கும் முகாமைத்துவத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகளை ஆராய்க.

(15 புள்ளிகள்)

02.(அ) வெற்றிகரமான திட்டம் ஒன்றை தயாரிக்கையில் கையாளக்கூடிய திட்டமிடலின் முன் ஆயத்த நோக்கங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) "கல்வித்துறையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்தல் முன்திட்டமிடலுக்குரிய ஏற்பாட்டை செய்தல் என்பன கல்வித்திட்டமிடலின் அடிப்படை நோக்கமாகும்." பாடசாலையை மையமாக வைத்து இக்கூற்றினை ஆராய்க.

(15 புள்ளிகள்)

03.(அ) "பாடசாலையில் திட்டமிடலை மேற்கொள்ளும்போது கடைப்பிடிக்கப்படும் திட்டமிடல் படிமுறைகளை குறிப்பிட்டு அவை நடைமுறைப்படுத்தப்படும் விதத்தினை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) உமது பிரதேசப்பாடசாலையில் காணப்படும் கல்விப் பிரச்சினை ஒன்றை இனம்கண்டு அதனைத் தீர்ப்பதற்கான செயற்றிட்டமொன்றை வரைக.

(15 புள்ளிகள்)

## பகுதி – II

04.(அ) "சிறந்த பாடசாலையைக் கட்டியெழுப்புவதில் அதிபர் ஒரு வினைத்திறனான திட்டமிடும் செயற்பாட்டாளராக தொழிற்படுவது அவசியமாகும்." இக்கூற்றினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

(ஆ) பாடசாலை வருடாந்த அமுலாக்கத்திட்டம் பகுதி – I, பகுதி – II என்பவற்றினுள் உள்ளடக்கப்படும் செயற்றிட்டங்களை உதாரணங்களின் மூலம் விளக்குக.

(20 புள்ளிகள்)

05.(அ) பிராந்திய ரீதியான கல்வி அபிவிருத்தியில் சமமின்மைக்கு பங்களிப்புச் செய்யும் மக்கள் தொகை, கல்வியியற் காரணிகள், புவியியற் காரணிகள், அரசியற் காரணிகள் போன்றவை பற்றி விமர்சன ரீதியாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

(ஆ) பாடசாலையில் ஏற்படும் பௌதிக, மனித வளப்பற்றாக்குறையைத் தீர்ப்பதில் பாடசாலை அதிபர் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது பயனுடையதாக அமையும் என்பது பற்றிய உமது கருத்துக்களை முன்வைத்து விளக்குக.

(20 புள்ளிகள்)

*****